## பொருளாதாரத்திலும் ‘திராவிட மாடல்’


● அர்விந்த் சுப்ரமணியன்

இந்திய ஒன்றிய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராகச் செயலாற்றியவர் அர்விந்த் சுப்ரமணியன். தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனைக் குழுவிலும் இடம்பெற்றுள்ளவர். சமீபத்தில், சென்னை பொருளியல் கல்வி மையத்தில் இவர் உரையாற்றுகையில், ‘‘இந்தியாவில் பொருளாதார ரீதியாக முன்னணியில் இருக்கும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருக்கிறது. தகவல்–தொழில்நுட்பம், உற்பத்தி எனப் பல துறைகளில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது” என்று பாராட்டியுள்ளார்.

“இந்தியப் பொருளாதாரத்தில் தமிழ்நாடு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு துறைகளில் தமிழ்நாடு வளர்ந்த மாநிலமாக இருக்கிறது. குறிப்பாக, உற்பத்தித் துறையில் பல மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கிறது. தமிழ்நாடு அரசு பின்பற்றும் பொருளாதாரக் கொள்கைகளை மற்ற மாநிலங்களும் பின்பற்றவேண்டும். அப்போதுதான் உற்பத்தித் துறையை மேம்படுத்த முடியும்” என்றும் தெரிவித்துள்ளார். குறிப்பாக, “உத்தரப் பிரதேசம், பீகார் மற்றும் ராஜஸ்தான் போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்கள் தமிழ்நாடு அரசை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டும்” என்றும் வலியுறுத்தியிருக்கிறார்.

வரிகளைக் குறைத்து மானியத்தை அதிகரிக்க வேண்டும், முதலீட்டுக் கொள்கைகள் எளிதாக்கப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கும் ஆலோசனை அளித்திருக்கிறார். அந்த வகையில், இந்திய ஒன்றியத்திற்கு முன்னோடியாகத் தமிழ்நாடு அரசு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், கொள்கைகளை எளிதாக்கியுள்ளது என்றும் பாராட்டி இருக்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்




மு.தம்பிதுரை

### குடும்பத்துடன் தலைவரிடம் வாழ்த்து!

2015-ஆம் ஆண்டு எனது இரண்டாவது மகள் அன்புமொழி- ஜானகிராமன் திருமண அழைப்பிதழை, தலைவர் கலைஞரிடம் கொடுத்து, வாழ்த்து பெற குடும்பத்துடன் சென்றிருந்தோம். அழைப்பிதழைப் பெற்றுக் கொண்ட தலைவரிடம், எனது மனைவி ஆரவள்ளி, “அப்பா எங்களது திருமணத்தையும் தாங்கள்தான் நடத்தி வச்சீங்க...” என நினைவுகூர்ந்தார். அப்போது தலைவர் புன்முறுவலுடன் எங்களை உற்றுநோக்கியது மெய்சிலிர்க்க வைத்தது. தற்போது, சென்னை மாநகராட்சி மன்ற 125-வது வார்டு உறுப்பினராக இருக்கும் எனது மகன் அன்புதாசன், மருமகள் ரேவதி மற்றும் பேரன்கள் உடனிருந்தனர்.

**– மு.தம்பிதுரை,**
**10–வது மண்டலக் குழு முன்னாள் தலைவர் (செ.மா),**
**மாநில மீனவர் அணித் துணைச் செயலாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழிசை இயக்கத்தின் தோற்றம்!

1917-ஆம் ஆண்டு முதல் ஆபிரகாம் பண்டிதர் இசை ஆராய்ச்சி குறித்த மாபெரும் ஆராய்ச்சி நூல்களை வெளியிடத் தொடங்கினார். ‘கருணாமிர்த சாகரம்’, ‘கருணாமிர்த சாகரத் திரட்டு’ இவ்விரு நூல்களும் கர்நாடக இசையின் அடிப்படை, தமிழிசையே என்பதை நிலைநாட்டின. அதற்கான ஆதாரங்களை ஆபிரகாம் பண்டிதர் எடுத்துக் காட்டினார். தமிழிசை இயக்கத்தின் தோற்றுவாயாக இந்த நிகழ்வு அமைந்தது.

# சீரணி → இளைஞர் அணி

40

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

# அறியாமையைப் போக்கிய இலட்சியப் பணி!

ஓவியம் : ரவி பேலட்





1957-ஆம் ஆண்டு தேர்தல்... அப்போது முத்தமிழறிஞர் கலைஞருக்கு குளித்தலை தொகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு அவர் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கிராமம் ஒன்றில், ‘மகாத்மா காந்தி இன்னும் உயிரோடிருக்கிறார்’ என்று நம்பிக்கொண்டிருந்த மக்களைப் பார்த்து, அவர்களின் அறியாமையை நினைத்து வருந்தினார்.

‘அறியாமைதான் துயரத்தின் தாய்’ என்பார்கள். அந்தத் துயரத்தை முற்றிலும் நீக்கும் பணியில்தான், கலைஞர் தன் வாழ்நாள் முழுவதும் செயல்பட்டு வந்தார். திட்டங்கள் பல தீட்டினார். அவற்றில் ஒன்றுதான் ‘இளைஞர் அணி’.

### தலைப்பிட்ட செய்தி

சீரணியை உருவாக்கித் தமிழ் மக்களின் இதயங்களில் நீங்காத இடம்பிடித்த பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15, 1971-இல் இந்தத் திட்டத்தை, திருச்சியில் தொடங்கி வைத்தார் கலைஞர். இதுகுறித்து, 1971-ஆம் ஆண்டு நவம்பர் 16 தேதியிட்ட ‘தமிழரசு’ இதழில் ‘இலட்சியப் பணிபுரியும் இளைஞர் அணி’ என்று தலைப்பிட்ட செய்திக் கட்டுரை இவ்வாறு தெரிவிக்கிறது:

‘ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பார்களே, அதைப் போல ஒரே நேரத்தில் இரண்டு விதமான நன்மைகளை இந்தத் திட்டம் உருவாக்கியிருக்கிறது. கிராம மக்களிடம் அறிவொளிப் பிரச்சாரமும் நடைபெறுகிறது; வேலையின்றித் திரியும் பட்டதாரிகளில் சிலருக்கு ஓரளவு வேலையும் கிடைக்கிறது. அவர்களின் வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருளாதாரத்தில் மாதம் ரூ.175 ஊதியமாகவும் கிடைக்கிறது. இந்த அணியில் தொண்டாற்றுவோருக்கு அரசுப் பணியில் சேர சிறப்புச் சலுகைகள் காட்டப்படுகின்றன.

இளைஞர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களுக்கு சத்திய விசய நகரம் (வட ஆற்காடு), கிருஷ்ணகிரி (தர்மபுரி), பவானிசாகர் (கோவை), பட்டுக்கோட்டை (தஞ்சாவூர்), தே.கல்லுப்பட்டி (மதுரை) முதலிய ஐந்து இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### வேளாண்மை முறைகள்

சமூகப் பொருளாதாரம், கிராமச் சூழ்நிலை இவைதான் இந்தப் பயிற்சியின் முதல்கட்டம். பயிற்சிக் காலம் 28 நாட்கள். முதல் பத்து நாட்கள் வகுப்பறைப் பயிற்சி நடைபெறுகிறது. கிராம வளர்ச்சியைப் பற்றிய பல்வேறு கருத்துகள் இங்கே கற்றுத் தரப்படுகின்றன. 11-ஆம் நாளிலிருந்து 20-ஆம் நாள் முடிய பத்து நாட்கள் ‘கிராமத்தில் இடம்பெறுதல்’ என்ற பயிற்சி நடைபெறுகிறது. கிராமத்தில் உள்ள மக்களுக்குப் புதுவித வேளாண்மை முறைகளைக் கையாளச் சொல்லி சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பயிற்சி இது. அதன் பிறகு, 21-ஆம் நாளிலிருந்து 28-ஆம் நாள் முடிய வகுப்பறைப் பயிற்சி நடைபெறுகிறது” என்று தெரிவிக்கும் அந்தக் கட்டுரை, சத்திய விசய நகரத்தில் இளைஞர் அணியினர் என்னென்ன பணிகளை மேற்கொண்டனர் என்பதைப் பட்டியலிடுகிறது.

57 பேர் கலந்துகொண்ட அந்தப் பயிற்சியில் கிராமத்துக்கு 11 பேர் வீதம் தாமரைப்பாக்கம், ஆனைமநல்லூர், காவனூர், மாம்பாக்கம், வேலூர் ஆகிய கிராமங்களில் சமூகப் பயிற்சியில் ஈடுபட்டனர். கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடுவது, விசைத் தெளிப்பான்களைப் பயன்படுத்தக் கற்றுத் தருவது, வீடுகளில் கழிவறை கட்டுவதன் முக்கியத்துவத்தை விளக்கிச் சொல்வது, காவனூர் என்ற பகுதியில் கழிவுப்பொருட்களை உரமாக்கும் ‘வார்தா’ முறை கழிவறையை ஏற்படுத்துவது, கூட்டுறவு வங்கிகளைப் பயன்படுத்த கற்றுத் தருவது போன்ற பணிகளை இளைஞர் அணியினர் மேற்கொண்டனர்.

பெரும்பாலும், இந்தப் பணிகளை எல்லாம் ஒவ்வொரு ஊரிலும் உள்ள கிராம நிர்வாகத்துடன் இணைந்தே மேற்கொண்டனர் இளைஞர் அணியினர்.

**...வெற்றிநடை போடும்.**

உடன்பிறப்புகளே... இந்த ‘இளைஞர் அணி’ திட்டத்தில் பங்குகொண்டவரா நீங்கள்...? அப்படியெனில், உடனே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:
அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

# பொய்ப்பெட்டி

40

**கோவி.லெனின்**

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”**

# சாத்தனூர் அணையும் சாதனை முதல்வரும்...

***‘ஃபெஞ்சல் புயல்-வெள்ள நிவாரணத் தொகையாக அறிவிக்கப்பட்டிருப்பது போதாது என்றும், சாத்தனூர் அணையைத் திறந்துவிட்டதால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு தி.மு.க. அரசே பொறுப்பேற்க வேண்டும்’ என்றும் அ.தி.மு.க.வும், பா.ம.க.வும் குற்றம்சாட்டுவது ஏன்?***

அ.தி.மு.க.வுக்கு அரசியல் செய்வதற்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை. சொந்தக் கட்சியில் நடக்கும் கலவரங்களையும் அடக்க முடியவில்லை. அதனால், வெள்ளத்தை வைத்து மடைமாற்றலாம் என நினைக்கிறது. பா.ம.க.வுக்குத் தன் இருப்பைக் காட்டிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. சாத்தனூர் அணைக்கான நீர்வரத்துப் பகுதிகளில் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழைப் பொழிவு ஏற்பட்டிருப்பதை வானிலை ஆய்வு மையம் உறுதி செய்திருக்கிறது. ஒரே நாளில் அரூர் வட்டத்தில் 251 மில்லிமீட்டர் மழையும், ஊத்தங்கரை வட்டத்தில் 185 மில்லி மீட்டர் மழையும், செங்கம் வட்டத்தில் 115 மில்லிமீட்டர் மழைப் பொழிவும் ஏற்பட்டுள்ளது. அதுபோலவே, சாத்தனூர் அணையிலிருந்து நீர் வெளியேறும் பகுதிகளில் உள்ள வட்டங்களிலும் தொடர்ச்சியாக கனமழை பெய்து பெண்ணையாற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் நிலை உருவானது. தண்டராம்பட்டு, திருவண்ணாமலை, சங்கராபுரம் போன்ற பகுதிகளில் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழை பெய்துள்ளது.

கடந்த 2023 டிசம்பரில் சாத்தனூர் அணை 95% கொள்ளளவை எட்டியிருந்தது. அப்போது மழைப் பொழிவு மெல்லக் குறைந்த நிலையில், அணையிலிருந்து விவசாயத்திற்கும் குடிநீருக்கும் மின் உற்பத்திக்கும் தேவையான அளவுக்கு சீராகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தது. 2024 ஏப்ரல் வரை சீராக தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில், மே-ஜூன் மாதங்களில் நீர்வரத்து சுத்தமாக இல்லாததால் அணையின் நீர்மட்டம் 20%ஆக குறைய, அணையிலிருந்து நீர் திறந்துவிடுவதும் நிறுத்தப்பட்டது.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து மழை பொழியத் தொடங்கியதால் 40%, செப்டம்பரில் 90%, அக்டோபரில் 95% என நீர்மட்டம் மீண்டும் உயர்ந்த நிலையில், சீராகவே தண்ணீர் திறந்துவிடப்பட்டு வந்தது. நவம்பர் 29 முதல் டிசம்பர் 5 வரையிலான நாட்களில் வரலாறு காணாத மழை அந்தப் பகுதிகளில் பொழிந்ததன் விளைவாகவே, அணையின் பாதுகாப்பு கருதி, முன்கூட்டியே எச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டு, கூடுதலான தண்ணீர் திறந்துவிடப்பட்டது.



பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்களும் அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிட்டு, உரிய நிவாரணமும் அளித்துள்ளனர். அ.தி.மு.க.- பா.ம.க. சொல்வதற்கும் உண்மைக்கும் சம்பந்தமில்லை என்பதை, தேசிய தண்ணீர் இயக்கம், தமிழ்நாடு விவசாயத்துறை, இந்திய வானிலை ஆய்வு மையத்தின் இணைய தளங்களில் உள்ள தரவுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.


**...வினா தொடரும்.**

**தேசிய தண்ணீர் இயக்கம், தமிழ்நாடு விவசாயத்துறை, இந்திய வானிலை ஆய்வு மையத்தின் இணைய தளங்களில் உள்ள தரவுகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

688

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.